# அரைப் பாடத்திட்ட தேர்வு - 2-2024

## தமிழ் (இயல் - 5 முதல் 8 வரை)

மதிப்பெண்கள் : 90.

வகுப்பு: பன்னிரண்டாம் வகுப்பு. நேரம்: 3 மணி.

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 14×1=14

1. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
2. திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் என்று கண்டுபிடித்தவர்__
அ) சார்லி சாப்ளின் ஆ) சாமிக்கண்ணு வின்சென்ட் இ) ஜார்ஜ் மிலி ஈ) எடிசன்
3. சகோடயாழ் __நரம்புகளைக் கொண்டது அ) 17 ஆ) 7 இ) 16 ஈ) 21
4. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்'-விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
5. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம் –
அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ – அனைத்தும்
6. பொருத்துக
அ) ஆமந்திரிகை – 1) பட்டத்து யானை
ஆ) அரசு உவா – 2) மூங்கில்
இ) கழஞ்சு – 3) இடக்கை வாத்தியம்
ஈ) கழை – 4) எடை அளவு
அ) 3142 ஆ) 4213 இ) 1234 ஈ) 4321
7. திண்ணியர் என்பதன் பொருள்_
அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்
8. வி.சி.கணேசனுக்கு 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டவர்
அ) அண்ணா ஆ) பெரியார் இ) கலைஞர் ஈ) வி.பி.கே.மேனன்
9. 'தமிழ் நதி' - அவர்கள் இயற்றாத நூல்__
அ) சூரியன் தனித்தலையும் பகல் ஆ) இரவுகளில் பொழியும் துயரப் பனி
இ) வாய்க்கால் மீன்கள் ஈ) கானல்வரி
10. ச. த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும் இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்
11. படிமம் என்பதன் பொருள் அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
12. 'காய்நெல்' - இலக்கண குறிப்பு தருக.
அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை
13. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி
14. 'சாபவிமோசனம்', 'அகலிகை' கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

### பகுதி - 2 பிரிவு -1

**குறுவினா (செய்யுள்) (எவையேனும் மூன்றனுக்கு விடை தருக)** 3×2=6

15. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?
16. கலிவிழா, ஒளிவிழா – விளக்கம் தருக.
17. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு எழுதுக.
18. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?

### பிரிவு - 2

**குறுவினா (உரைநடை) (எவையேனும் இரண்டனுக்கு விடை தருக)** 2×2=4

19. பருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக

### பிரிவு - 3

**மொழித்திறன் பயிற்சி (எவையேனும் ஏழனுக்கு மட்டும் விடை தருக)** 7×2=14

22. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக. (குழந்தை, நட, தளிர்நடை, விழு)
23. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
(அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான)
24. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க. (தின்மை - திண்மை)
25. காப்பியத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?
26. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.1.கண்துடைப்பு 2.வழிவழியாக
27. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
1. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான். 2. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.
28. தமிழாக்கம் தருக. 1.Teller - 2. Animation -
29. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) பகைத்த - ஆ) வெகுளி -
30. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக. அ) ஏழையென - ஆ) தலைக்கோல் -

## பகுதி - 3 பிரிவு - 1

சிறு வினா (செய்யுள்) (எவையேனும் இரண்டனுக்கு விடை தருக) 2×4=8

31. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?
32. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.
34. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?

### பிரிவு - 2

சிறு வினா (உரைநடை) (எவையேனும் இரண்டனுக்கு விடை தருக) 2×4=8

35. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
36. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை அளிக்க. 3×4=12

39. சொற்பொருள் பின்வரு நிலையணி (அல்லது) தொழில் உவமையணியைச் சான்றுடன் விளக்குக.
40. பின்வரும் பாடலை படித்து பொருள் உணர்ந்து மையக்கருத்தினை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே –கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை –செலுத்தி
இரவலரோடு பேசுவேன்
இரவெரிக்கும் பரிதியை ஏழை
விறகெரிக்க வீசுவேன்

- நா.காமராசன்

41. தமிழாக்கம் தருக

Popular as the 'Cultural Capital' of India, Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form, the paintings showcase the embellished form of the sacred deities of the region. The deities in the paintings are festooned with glass pieces, pearls, semi-precious stones, and gold and other vibrant colours. In the modern times, Tanjore paintings look up to human figures, animals, floral motifs and birds as muses.

42. கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.

| சங்க இலக்கியங்கள் | | | | |
|---|---|---|---|---|
| எட்டுத்தொகை | | | பத்துப்பாட்டு | |
| அகம் | புறம் | அகமும் புறமும் | அகம் | புறம் |
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் | குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | | முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| ஐங்குறுநூறு | | | நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| அகநானூறு | | | பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| கலித்தொகை | | | | சிறுபாணாற்றுப்படை |
| | | | | கூத்தராற்றுப்படை |

43. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக
   1. நேற்று முதல் ___ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
   2. உங்களுக்கு ___ (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.
   3. முருகன் ___ (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
   4. நம்முடைய ___ (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

## பகுதி - 4

நெடுவினா (இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக) 3×6=18

44. சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன? (அல்லது) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.
45. நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது) திரைப்படைத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.
46. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக. (அல்லது) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது –விளக்குக.

## பகுதி - 5

அடி பிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

47. அ) "குழல்வழி......" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.
   ஆ) "......தொடர்பு" என முடியும் குறட்பா.

(நம் வாழ்வில் மேற்கொள்ளும் மிகச்சிறந்த செயல் - கற்றல்...)

மோ. ஜீவா. எம்.ஏ, பி.எட், எம்.:.பில்., முதுகலைத் தமிழாசிரியர்.